
பங்குனி

**MARCH 1990**



நாம் எல்லாம் இழந்தோம்
எனினும்
வேண்டவே வேண்டாம்
எங்களில் சிலரது விடுதலை
மட்டும்;
விலங்கொடு கூடிய
விடுதலை மட்டும்
வேண்டவே வேண்டாம்!

தோழர்களே
விலங்குகளுக்கெல்லாம்
விலங்கொன்றைச் செய்தபின்
நாங்கள் பெறுவோம்
விடுதலை ஒன்றை.

சி.சிவரமணி.

# தேனீ

THENEE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தூக்கமா இன்னமும்
தூக்கத்தை
துரத்திவிடு
தூரத்திற்கு,
துயர் துடைக்க
இரவலர் எதற்கு.

சுமையுடன்
கூடவே சுற்றப்பட்டிருக்கும்
துயர்விலங்குகளை
துச்சமெனவுணர்ந்து
துணிவுடன் வெளியே
வரும்வரை
சுதந்திரம் சுருதியில்லாதது.
சுதந்திரத்தை
சுவாசித்தால் அல்லவா
சுகம் புரியும்.

உனை
நீயேயுணர்ந்து
மூடுதிரைகள் உட்பட
மூடநம்பிக்கைகளையும்
மூலையில்
முடக்கிவிட்டு
முன்னேறு
முயற்சிகள்
நல்ல
முடிவிற்கு
முதல்படியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீங்காரம்

அன்பானவர்களுக்குத் தேனீயின் அன்பான வணக்கங்கள்.

உலகம் முழுவதும் உள்ள நாடுகளில், உள்ள பெரும்பான்மை மக்கள் அந்தந்த நாடுகளிலுள்ள சிறுபான்மையான உயர்ந்த வர்க்கத்தவர்களின் ஆளுமைக்குட்பட்டிருக்கின்றனர்.

அநேகமான நாடுகளில் 90 சத வீதமான மூலவளங்களை 10 வீதமானவர்களே சொந்தமாக்கியுள்ளனர். இவ்விதம் பெரும்பான்மையினர் ஒடுக்கப்படும் பொழுதும் இவர்களில் சரிபாதியான பெண்கள் மேலும் ஒடுக்கப்படுகிறார்கள்.

ஆண்டாண்டு காலத்திற்கு முந்திய வரலாற்று வளர்ச்சியொன்று "பெண்ணடிமை"யை நிரந்தர வழமையாக்கி, தனியுடமை முறையைப்பேணும் முதலாளித்துவ அமைப்பு முறைக்கு வழி சமைத்து விட்டுச் சென்றுவிட்டது.

வளர்ச்சியடையாத மூன்றாம் உலகநாடுகளில், நிலவுகின்ற பிற்போக்குத்தனங்கள் சுரண்டும் முதலாளித்துவத்தின் நலன்களுக்காய் மறைமுகமாகப் பேணப்படுகின்றன. வளர்ச்சியடையாத இந்நாடுகளில் பெரும்பான்மை பிரஜைகள் முதலாளித்துவ அமைப்புமுறையை கட்டிக்காக்கின்ற சேவகர்களாகவும், அவர்களின் வீடுகளில் உள்ள பெண்கள் அவர்களுக்குச் சேவைசெய்யும் கேவலமான அடிமைகளாகவும் தமது வாழ்வைக் கழிக்கின்றனர்.

தனியுடமைச் சமுதாயம் அந்நாடுகளில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதையும், இதனால் கலாசார ரீதியாகவும் **இவை** முன்னேறாதிருப்பதும் சுரண்டும் நாடுகள் பாவித்துக்கொள்கின்றன. இதற்காக ஆணாதிக்கமும் பெண்ணொடுக்குமுறையும் கொடிகட்டி பறக்கின்றன. பின்தங்கிய மூடச்சம்பிரதாயங்களிலும், முக்காடுகளிலும், பண்பாடுகளிலும் மறைக்கப்படும் பெண்களது வாழ்வின் சுதந்திரங்கள் தொடர்ந்தும் இருட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் அடிமைச்சின்னங்களாக சுரண்டல்முறையின் சாட்சியங்களாக பெண்களே இருக்கின்றனர். இருக்கும்படி வைக்கப்பட்டுள்ளனர்.

பெண், தான் ஒரு ஆணுக்கு அடிமையாக இருப்பதில் பெருமை கொள்வதும், பெண்ணை அடிமை கொள்வதில் ஆண் பெருமிதம் அடைவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய காட்டுமிராண்டிச் சமூகமுறையில் அங்கிகரிக்கப்பட்ட சாதாரண வாழ்க்கைமுறையே.

பெண்களின் சுதந்திரங்கள் சகல மட்டங்களிலும் மறுக்கப்படுவதையும், பராபட்சம் காட்டப்படுவதையும், பேணப்படும் தனிவுடமை அமைப்புமுறையை அப்படியே வைத்தபடியே எந்தநாடுகளினாலும் ஒழித்துவிடமுடியாது.

"பின் தங்கிய நாடுகள் " என்று பொதுவாக வர்ணிக்கப்படும் நாடுகளில் உள்ள, பெண்கள் அமைப்புக்கள் வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள பெண்கள் அமைப்புகளை விடவும் யதார்த்தமான கோரிக்கைகளுடன் கூடிய போராட்டங்களை நிகழ்த்தும் தன்மை உடையனவாக இருக்கின்றன. தாம் வசிக்கும் தேசங்களில், இவர்கள் வளர்ந்த நாடுகளின் சுரண்டலுக்கு முகம்கொடுக்கும் அதேவேளை, பெண்கள் என்ற ரீதியில் மேலதிகமாக அடக்கப்படுவதற்கும் எதிரான வெளிப்பாடுகளாக இவை திகழ்கின்றன.

அடிப்படை அமைப்புமாற்றத்தின் அவசியம் பெண்களின் அடிப்படைக் கோரிக்கைளிலேய மறைமுகமாக வலியுறுத்தப்படுகின்றன.

இன்று பெண்ணடிமையைப்பேணும் நாடுகளில் கூட "உத்தியோகபூர்வ" விழாவாகக் கொண்டாடப்படும் சர்வதேச பெண்கள் தினம், உண்மையில் தமது உரிமைகளுக்காக பெண்கள் நடாத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தின் வெற்றியை 78 வருடங்களுக்கு மேலாக நினைவுபடுத்திவரும் ஒரு தினமேயாகும். இது வெறும் மரம்நாட்டு விழாவோ களியாட்ட விழாவோ எனக் கொச்சைப்படுத்துவது அறிவீனம். இத்தினத்தில் ருசியாவில் ஏற்பட்ட எழுச்சியே முதலாவது தொழிலாளர் புரட்சிக்கு வித்திட்டது என்பது வரலாறு. 103 ஆண்டுகளுக்கு முன்பு சிக்காக்கோ நகரில் ஏற்பட்ட தொழிலாளர் எழுச்சி சர்வதேச தொழிலாளர்கள் மேதினமாக உருவாகியது போல் மார்ச் 8 சர்வதேச பெண்கள் இயக்கங்களுக்கு முக்கியமாகும். அனைத்து ஆதிக்கங்களையும் அசைத்து வீழ்த்தக்கூடிய சக்திமிக்க போராட்டங்கள் பலவற்றை நிகழ்த்த வேண்டிய பெண்களின் சரித்திரக்கடமையை இத்தினம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

தேனீக்கள்.

---

தேனீயில் வெளியாகும் ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளிகள்.

---

அட்டைப்படக்கவிதை நன்றி : *சொல்லாத சேதிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பிரளயம்

- தாமரைச்செல்வி -

முற்றத்தில் காயப்போட்டிருந்த பின்னப்பட்ட கிடுகளை வீட்டிற்கு பின்புறத்திலுள்ள கொட்டிலில் போட்டுவிட்டு, அசலின் வீட்டிற்குள் நுழைந்தாள். சூரியன் கீழிறங்கிக் கொண்டிருந்ததால் இருள் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது.

குப்பிலாம்பிற்கு எண்ணையிட்டு கொழுத்தியபோது, வீட்டிலிருப்பவர்களின் முகங்கள் தெரியப்போதுமான அளவு மங்கிய வெளிச்சத்தை அது கொடுத்தது.

விளக்கை விறாந்தையிலுள்ள பெட்டகத்தின்மேல் வைத்துவிட்டு பெட்டகத்தின் லாச்சியைத் திறந்து அதிலிருந்த பெட்டியைத் திறந்து பத்துருபாய்ச்சில்லறையை வெளியே எடுத்து திரும்பவும் இலாச்சியைப் பூட்டியபோது, அது மேசையில் உரசியச் சத்தம் எதிரொலித்ததில் கீழே படுத்திருந்த அடைக்கோழி அதிர்ந்திருக்கவேண்டும். அது தன் கரகரத்தக்குரலில் கொக்கரித்தது.

தனக்கும், அடைக்காக்கும் முட்டைகளுக்கும் நிம்மதி வேணடுமென்று அது நினைத்திருக்கவேண்டும்.

"மகள் .... மகள்!!! இந்த இருட்டில் இந்தப்பிள்ளை எங்கே தான் போயிட்டாளோ."

"என்ன அம்மா, ஏன் அடித்தொண்டையாலே கத்துறீங்க. நான் கக்கூசுக்கு போனனான். அதுக்குக்கூட எனக்கு நிம்மதியில்லையா?"

"அப்புஹாமி இப்ப வழியில் வந்து கொண்டிருப்பார். வா! கெதியாய் சந்திக்குப்போய் இரண்டு இறாத்தல் பாண் வாங்கி வரலாம். அந்த யசவத்திக்கு நடந்த விசயத்தை யோசிக்கையில் உன்னைத் தனிய வீட்டைவிட்டிட்டு போக எனக்கு பயமிருக்கு"

அசலினுக்கும் அப்புஹாமிக்கும் திருமணமாகி பதினைந்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. பலவருடங்களுக்கு முன் அவர்களுக்குச் சொந்தமாக றப்பர் ஷீட்டுக்களை நெரிக்கும் இயந்திரமொன்றும், புகைபோடும் குடிலொன்றும் இருந்தன. அந்தக்காலத்தில் அவர்களுக்குப் போதுமான வருமானத்தை அவை ஈட்டிக்கொடுத்தன. அப்புஹாமிக்குச் சொந்தமான சிறிய வயலிலிருந்து வந்த வரவும், றப்பரைக் காயப்போடுவதால் வந்த சம்பாத்தியமும், அவர்களை யாரிலும் தங்கியிருக்காமல் சொந்தக்காலில் நிற்க வைத்தது.

காலம் மாறியபோது நாட்டில் அரசும், ஆட்சிமுறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாளிகளின் காட்டில மழை பெய்தது. இவர்கள் இறப்பர் தட்டுகளைச் செய்வதற்குமுன் மொத்தமாக பாலையே முதலாளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிச்சென்றனர். இவை அப்புஹாமியின் வருமானத்தில் பலத்த இடிகளாக விழுநதன. அவர் குடிப்பழக்கத்திடம் தஞ்சம் கோரினார்.

பகல் முழுவதும் நித்திரை கொள்ளுவார். மாலைகளில் சாராயக்கொட்டகைக்குச்சென்று, சாராயத்தை வடிப்பதற்கு உதவி செய்தும், விறகுகளை வெட்டியும் பின் அங்கேயே குடித்து போதியளவிற்கு போதையேறிப்போய நாலுகால்களில் வீட்டிற்குப் போவார்.

"ஏன் அம்மா ஒவ்வொரு நாளும் இரவிற்கு பாண மட்டுமே சாப்பிடவேணும்? நேற்று இடிச்ச அரிசிமாவில ரொட்டி சுட்டுச்சாப்பிடுவோம். இந்த இருட்டுப்பட்ட நேரத்தில் அட்டா சந்தியில இருககிற வாய்க்காலில விழுந்துகிடப்பார். ஒவ்வொருநாளும் இந்தக் குடிகாரனை தோளிலபோட்டு வீட்டுக்கு கொண்டுவர என்னாலஏலாது"

"அடியே! நீ ஆரைப்பற்றி இப்பிடிக்கதைக்கிறாய? அவர் உனரை தகப்பன் தானே. எங்கட கெட்ட காலத்திற்கு என்ன செய்வது"

"கண்டறியாத கெட்டகாலம்... இந்தக் குடிகாரனை எப்படி நான தகப்பன் என்று சொல்லுவன். லெக்சன் காலத்தில விடியமட்டும கொடிக்கட்டப்போய குடிபழகினார். தனக்கென்ன அரசியலில தலையைப் போட்டதுக்கு இப்படி நடந்தது போதாது"

"பிள்ளை... இதுகளெல்லாம கதைக்கிற விசயங்களே. இரவு நேரத்தில... யாரும் கேட்டுக்கொண்டிருந்தால்,நாங்கள் இந்த வீட்டில இருந்தபாடில்லை."

"இப்படிப்பட்ட மனுசனை கட்டிப்போட்டு நீங்க ஏன இவ்வளவு கஷ்டப்படவேணும எண்டு எனக்கெண்டா விளங்கயில்லை"

அசலின் அடிக்கடி விறாந்தைக்கு வந்து கணவன வருகிறாரா என்று வீதியைப் பார்த்தாா. மீண்டும குசினிக்குள் சென்று ரொட்டி சுடுவதில மகளுக்கு உதவினாள.

"ஏன் அங்கையிங்கை ஓடித்திரியிறீங்கள. நான தேங்காயை துருவி ரொட்டியைச் செய்யமட்டும் இங்க வந்து இந்த அடுப்பை மூட்டுங்கோவன்"

அசலின், பழைய கோடுவாயக்கத்திப்படுத்து தேங்காயமட்டை, பொச்சு, சிரட்டை ஆகியவற்றை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்பைச் சரிசெய்தாள்.

குசினியின் பின்புறம் இப்பொழுது நிறையவே இருட்டியிருந்தது.

தவளைகளினதும், தேரைகளினதும் சத்தங்கள் மெல்லமெல்ல ஆட்சிசெய்யத் தொடங்கின.

குளிர்காற்று உடலுக்கும், உள்ளத்திற்கும் புதிய தெம்பைக் கொண்டுவந்தது.

இருவரும் கொஞ்சநேரம் பேச்சேதுமின்றி அமைதியாக இருந்தனர். வாசம வீசியபடி இரண்டு ரொட்டிகள் உருவாகியிருந்தன.

குடிபோதையுடன் வீட்டிற்குள் பிரவேசித்த அப்புஹாமி விழாக்குறையாய் கயிற்றுக்கட்டிலில் படுத்துக்கொணடான். போதையில அவனது அலட்டல் கீழ்ஸ்தாயி, மேல்ஸ்தாயில் மாறிமாறி ஒலித்தது.

ரொட்டி வாசத்துடன் சாராய நெடியம் கலந்து கொண்டது. அரசியலும், இடையிடையில் பாட்டுமாய் அப்புஹாமியிடமிருந்து வெளிவந்து கொண்டிருந்தது.

"கடவுளே! இப்படியொரு பிறப்ப.... இவ்வளவ கஷ்டப்பட்டபிறகும் இந்த அரசாங்கத்திற்குத்தான பந்தம பிடிப்பார். நெடுகிலும் பேசுவது இந்த ஆட்சியையில்லை. போனமுறை ஆட்சியை..."

"வாயை மூடடி! அப்புஹாமி கேட்டால் போச்சுது"

"எனக்கு அமமாவை நினைச்சுத்தான் கவலை.என்ர வாழக்கையை இனியும் இதேமாதிரிக் கழிக்க எனககு விருப்பமில்லை. உங்களால இவரைத் திருத்த முடியாதென்றால் நான் தான திருத்தவேண்டும்" திலகா தாயைப பார்த்தபடி கூறினாள்.

"இப்படித் தகப்பனைபபற்றிக் கதைக்கிறதுககு உனக்கு பாவம தான் கிடைக்கும்"

"எது பாவம். எது புண்ணியம என்டு முடிவென்றால் எனக்கு விளங்கப்படுத்துங்கோ பாப்போம"

"தொடங்கிட்டாள் தன்ர பிரசங்கத்தை. உன்ரை கேள்விகளுக்கு எனககு பதில் தெரியாது. உந்த ரொட்டியைத் தா! தாச்சி சரியாகக் கொதிக்குது"

"இதுதான் நான் அம்மாவுக்கு நெடுகச சொல்லுறது. நாங்கள் இரண்டு பேரும் நிம்மதியை வாழுற வழியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பார்க்கிறன் என்டு. பொம்பிளைகள் என்றதுக்காக எத்தனை நாளுக்கு இவற்றை ஆதிக்கத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கிறது"

"அசிலியோ.... அசிலியோ.... இங்கை வாடி. என்ரை கால் உளையுது. கொஞ்சம் பிடிச்சு விடடி. ஏ... அசிலியோ"

விறாந்தையிலிருந்து வந்த கணவனின் குரல் கேட்டு அசலின் வழமைபோல் எழும்பலானாள்.

கொதிப்படைந்த திலகா அவளை வலுக்கட்டாயமாக இருத்தினாள்.

தும்புத்தடியை கையெலெடுத்தபடி விறாந்தைக்கு விரைந்தாள்.


வழக்கம்போலவே அசலின் ஓரமாய் ஒதுங்கி அழத்தொடங்கினாள். கட்டியிருந்த துணியால் கண்ணீரைத் துடைத்தபடி புத்தரையும், ஏனைய தெய்வங்களையும் வேண்டிக்கொண்டாள்.

கோபமடைந்த திலகாவின் குரலும், குடித்திருந்த அப்புஹாமியின் குரலும் ஏறியும், இறங்கியும் கேட்டுக்கொண்டிருந்தன. சிறிது நேரத்துக்குப்பின் அப்புஹாமியை தும்புத்தடியைக் காட்டி வீட்டிலிருந்து வெளியேற்றினாள் திலகா.

"இனிமேல் குடிச்சுபோட்டு இந்த வீட்டுப்படியை மிதிக்கக்கூடாது. மனுசனாய் திரும்பி வந்தால் பரவாயில்லை."

மகளின் சாதுரியத்திற்கும், எளிமைக்கும் அடங்கிப்போன அப்புஹாமி போதையிலிருந்து விடுபடுகையில் நடுச்சாமமாகவிருந்தது.

மற்றைய நாட்களில் மனைவியினதும், மகளினதும் பணிவிடை பெறும் அப்புஹாமி, வீதியின் ஓரத்தில் வளர்ந்திருந்த தொட்டாச்சிணுங்கி புதருக்குள் விழுந்து படுத்துக்கிடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் சந்திப்பு

– மங்கையர்க்கரசி

17.03.89 அன்று கேர்ண நகரில் முதன்முதலாக ஹேர்ண, பெண்கள்வட்டத்தினரால் ஒழுங்குசெய்யப்பப்பட்டு பெண்கள் சந்திப்பொன்று நடைபெற்றது. இச்சந்திப்பிற்கு வெவ்வேறு நகரங்களிலுமிருந்து பெண்கள் கலந்துகொண்டனர். சுமார் 25 பேர் வரை கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் பெண்கள் குழுக்களும் அடங்கும். முதற் சந்திப்பிலேயே இவ்வளவு பெண்கள் கலந்து கொண்டமை வரவேற்கத்தக்கதும மகிழ்ச்சிக்குரியதுமாகும். காலை 10.30 மணியளவில் வரவேற்புரையுடன் இந்நிகழ்ச்சி ஆரம்பமானது. ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம செய்துகொண்டபின் குழுக்களின் அறிமுகமும், முன்னைய காலத்தில் செய்தவை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதனையடுத்து கலந்துரையாடல் ஆரம்பமானது. இக்கலந்துரையாடலில் அநேகமான பெண்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தமையை இங்கு அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. "பெண்கள் இன்று கூடியிருப்பதை பார்க்கும பொழுது மகிழ்ச்சியாகவும், தொடர்ந்தும் இச்சந்திப்பை நடாத்துவது நல்லது" எனவும் ஒரு பெணமணி கூறினார். ஒவ்வொரு நகரங்களிலும் பெண்கள தங்களது வீட்டில் எப்படி வாழ்கிறார்கள்? கணவன்மாரால் எப்படி நடாததப்படுகிறார்கள் என்றும், அவர்கள் ஏன் குழுக்களாக இயங்க தயங்குகின்றனர் என்றும் கலந்துரையாடப்பட்டது. அப்பெண்களைக் குழுக்களாக்குவதற்கு குழுவாக இயங்குபவர்கள், அவர்களிடம் சென்று கதைக்கவேண்டும் என்றும கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதில் தங்களுடைய பிரச்சனைகளையும் கூறினார்கள். அடுத்து "நாளைய பெண்ணின அவலம" எனற திசையில் வெளியாகியிருந்த கட்டுரை வாசிக்கப்பட்டு விவாதிக்கபபட்டது. இறுதியாக புகலிடத்தில பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளும், அவற்றிற்கான தீர்வுகள் என்ற தலைப்பில் சிலர் தங்களக்கு நடந்தவற்றையும், தங்குமிடம், வீட்டுவசதி என்பனவற்றையும், மறறும் சிலர் தங்களுக்கு தெரிந்த பெண்களுக்கு நடந்தவைபற்றியும் கூறினார்கள். இறுதியாக 4மணியளவில் இச்சந்திப்பு முடிவுற்றது. தொடர்ந்தும் இச்சந்திப்பு நடைபெறுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

---

நன்றி;
"கிறபிக்" :கோவிந்து
"கார்டூன்":தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவர்களுக்குந்தான் விடுதலை

— உமா —

பெண்களுக்கு மறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைக் கோரி சர்வதேச ரீதியில் உரிமைக்குரல்கள் எழத்தொடங்கியிருக்கும் வேளையிலும், பெண்கள் எத்தகைய ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தப்படுகிறார்கள், அவர்கள் கோரும் உரிமைகள் என்ன என்பது பற்றி சில தெளிவின்மைகளும் நிலவுகின்றன. பாலியல் ரீதியான சுதந்திரத்தை நாடியே பெண்களின் செயற்பாடுகள் உள்ளதென முதலாளித்துவத் தொலைதொடர்புச் சாதனங்கள், மத சார்பான அமைப்புகள் போன்றவை பெண்விடுதலைக் கோஷங்களைத் திசைதிருப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

பெண்விடுதலைக்கான குரல்கள் ஒரு பாகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டாலும், இன்னொரு பாகம் இன்னும் உறக்கத்திலேயே ஆழ்ந்திருக்கின்றது. அதிகபட்சமான பெண்களே தங்களுக்கு விடுதலை அவசியமென்பதை உணராத நிலையிலிருப்பது வேதனைக்குரிய விடயமாகவுள்ளது. பொதுவாக எந்த விடயத்திலும் கூடுதலாக பாதிக்கப்படுபவர்களுக்குத்தான் விடுதலை அவசியம். அவர்களால் தான் உண்மையான விடிவைநோக்கி செயல்படவேண்டிய அவசியமிருக்கும்.

காலகாலமாக பெண் என்பவள் அடிமையாக, ஆண்களால் பாவிக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் பொருளாகவே கருதப்படுகின்றாள். சிறுவயதிலிருந்து ஒரு பெண் ஒரு வரையறுக்கப்பட்ட கட்டுக்கோப்புக்குள் வளர்க்கப்படுகின்றாள். புறச்சூழலில் நிகழும் அசைவுகளினால் அவர்கள் உளவியல ரீதியாக பாதிக்கப்படுகின்றார்கள். அச்சூழ்நிலைகளுடன் வளர்வதால், அவர்கள் ஒடுக்கபபடுவதாக உணராமலேயே அதனை வாழ்க்கை முறையாக வழக்கப்படுத்திக்கொள்கிறார்கள்.

பொருளாதார உறவுமுறைகள்,பிற்போக்குத்தனமான சட்டத்திட்டங்கள், வழமையான ஸ்திரப்படுத்தப்பட்ட சம்பிரதாயங்கள், மதக்கோட்பாடுகள், சமுதாயப்பிரிவுகள், கலாசாரம் போன்ற காரணிகளே பெண்கள் ஒடுக்கப்படுவதற்கு முக்கியமான காரணங்களாக அமைந்துள்ளன. பெண்ஒடுக்குமுறை முதலாளித்துவத்தின் நலன்களைப் பாதுகாக்கும்முகமாகவே இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக பெண்ணின் உழைப்பு குடும்பத்துக்குள் உள்ளடக்கப்பட்டு, அவளுக்கும் சமுதாயத்திற்குமான நேரடித்தொடர்பு துண்டிக்கப்பட்டு, பெண்ணின் இயற்கையான இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு, குடும்பம் என்ற முறையிலேயே முதலாளித்துவ அமைப்புமுறை உருவாக்கப்பட்டுள்ளது. பெண் வீட்டுவேலைகள், பிள்ளை பராமரிப்பு போன்றவற்றுடன், வீட்டிலிருந்து தொழிலுக்குச் செல்லும் ஆண்களின் சுயதேவைகளை நிறைவேற்றுபவளாகவே பாவிக்கப்படுகின்றாள். எந்தவொரு துறையிலாவது பெண்களுக்கு பயிற்சியளித்தால், அவர்கள் திருமணமாகி செல்லுதல் அல்லது கற்பமுறுவதால் அவர்களால் அதிக பயன்பெறமுடியாமையினால், ஆண்களுக்கு கூடிய பயிற்சி, வேலைவாய்ப்புகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது. தொழில் செய்யுமிடங்களிலும் ஒரே விதமான வேலைகளைச் செய்பவர்களாயினும், சம்பளத்தில் சமமின்மை காணப்படுகின்றது. ஒரு



பெண்' தொழிலில் உயர்ந்த ஸ்தானத்தில் அங்கம்வகித்தால், ஒரு ஆண் செய்யவேண்டிய வேலையைப் பெண் செய்கின்றாள் என்ற அபிப்பிராயம் பொதுவாக நிலவுகின்றது. உழைக்கும் பெண்கள் சம்பளத்தினால் மட்டுமல்லாது பாலியல் பலாத்காரங்களினாலும்ஒடுக்கப்படுகின்றாள்.

பெண் விடுதலையென்பது வர்க்கங்களாகப் பிளவுபட்டிருக்கும் சமூகப்பிரிவுகள், குடும்பமுறை, பொருளாதாரம் என்பவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது. வீட்டிலிருக்கும் பெண்களோ அல்லது தொழில் செய்யும் பெண்களோ வெவ்வேறு விதங்களில் ஒடுக்குமுறைக்குட்படுத்தப்படுகின்றாள். பெண்களின் சுயதேவைகள் பற்றிய முடிவுகள் அவளைச் சூழவுள்ளவர்களால் தீர்மாணிக்கப்பட்டு, அவர்களின் சுயதேவைகளை நிறைவேற்றவேண்டியவளாக உள்ளாள். பெண்களின் உடல்நிலையைப்பற்றி தாமே தீர்மாணிக்கவும், குழந்தைகள் வேண்டுமா அல்லது வேண்டாமா என முடிவெடுப்பதற்கு பெண்களுக்கு முழுச்சுதந்திரம் கொடுக்கப்படுவதில்லை. தான் பெற்றெடுக்கும் குழந்தைக்கான பெயர் பெரும்பாலும் தந்தையாலே தீர்மாணிக்கப்பட்டு, தந்தையின் பரம்பரையைக் காப்பாற்றுமுகமாகவே பெயர்கள் சூட்டப்படுகின்றன. தாயின் ஆசைகள் வழமை போலவே மறுக்கப்படுகின்றன.

சர்வதேச ரீதியாக பல்வேறு மட்டங்களிலிருந்து பெண் ஒடுக்குமுறைக்கெதிரான குரல்கள் ஒலிக்கும் அறிகுறிகள் முதலாளித்துவத்திற்கு பல சமூக நெருக்கடிகளை கொடுத்திருக்கின்றது. பெண்களின் பொதுவான கோரிக்கைகளான பெண்கள் பொருளாதாரம், கலாசார நடவடிக்கைகள் போன்றவற்றில் சமஉரிமையுடன் பங்குபெறுதல், சட்டரீதியான சமத்துவம் ஆகியன முக்கியமானவையாகும். உதாரணமாக கல்வியில் சமஉரிமை, சமவேலைவாய்ப்பு, சமவேலைக்கான சமமான சம்பளம் போன்றவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கோரிக்கைகளை முழுமையாக செயற்படுத்துவது, முதலாளித்துவ அமைப்புமுறையில் நிறைவேற்ற முடியாது இருப்பினும், இந்தக் கோஷங்களை திசைதிருப்புவதற்கான விடயங்களில் தன்னாலான முயற்சிகளைக் செய்துவருகின்றது. உண்மையான விடுதலையை வேண்டி நிற்கும் அடிமட்டத்திலுள்ள பெண்களினதும், தொழிலாளப் பெண்களினதும் உரிமைகளைப் புறக்கணித்துவிட்டு, தங்களுக்கு சாதகமாக நிலையில்லாது தளர்ந்து கொண்டிருக்கும் மத்தியதரவர்க்கத்திலிருக்கும் புத்திஜீவிகளிடமிருந்து எழும்கோஷங்களை திசைதிருப்புமுகமாக பல முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.பெண்கள் மின்சாரசமையல் உபகரணங்களை பாவிப்பதன் மூலம் சமைப்பதற்கு உபயோகிக்கும் நேரம் துரிதப்படுத்துவதாக விளம்பரப்படுத்துவதைப் பார்க்குமிடத்தில், பெண்களின் வேலை சமையல் தான்; அதற்கான சில வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் அவர்களைத் திருப்திப்படுத்துவதாக அமைகின்றது.

பெண்ஒடுக்குமுறை வர்க்க சமுதாயத்ததில் அம்சமாகவே காலகாலமாகவே விளங்குவதனால், எல்லாப் பெண்களும் ஒரு அமைப்புக்குள் இணைந்து போராடுவது என்பது சாத்தியமற்றது. ஏனென்றால் முழுமையான பெண்விடுதலைக்கான போராட்டம் சமூகமாற்றத்தினூடாக ஏற்படுத்தப்படும் போது அதற்கெதிரான பிரிவுகளில் பெண்களும் நிச்சயமாக இருக்கத்தான் செய்வார்கள். வீட்டில் எல்லா வசதியுடனும் வேலைக்கு ஆட்களை வைத்து மின்சார அடுப்புகளில் சமையல் செய்பவர்களுக்கும், ஒரு நாள் உணவுக்கே வழியில்லாது கஷ்டப்பட்டு சம்பாதித்து, தூர இடங்களுக்குச் சென்று விறகு சேகரித்து அதற்குப்பின் சமையல் செய்பவர்களுக்கும் நிச்சயம் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும்.

அதிகமான பெண்களுக்கு பெண்விடுதலை என்றால் என்ன என்பது விளக்கமற்றிருப்பது புத்திஜீவி மட்டத்திலிருக்கும் பெண்களின் பங்காகவும் உள்ளது. தங்களைத் தனிமைப்படுத்தி, நடைமுறை வாழ்க்கையை உற்றுப்பார்க்காமல், அல்லது அடிமட்டத்தில் எந்தவிதமான முயற்சிகளை மேற்கொள்ளாது , சித்தாந்தங்களை மட்டும் விமர்சிப்பபவர்களாக மட்டும் இருப்பதனால் எந்தவிதமான பயனுமில்லை. குறிப்பாக மத்தியதரவர்க்க பெண்கள் தாங்கள் இருக்கும் நிலையிலிருந்து சற்றும் விலகாமல் செயற்படத்தான் விரும்புகிறார்கள். உண்மையான பிரச்சனையை நோக்காது , சீதனத்தைப்பபற்றியும், தாலி கட்டுவது அவசியமா? அல்லது ஆண்களுக்குத் தாலி கட்டினால் என்ன? எனும் விவாதங்களும் பெண்விடுதலையை திசைதிருப்பும் கோஷங்களாகவே அமைகின்றன. மத்தியதாவர்க்க புத்திஜீவிகள் அடிமட்டத்திலிருக்கும் தொழிலாளர்களுடன் இணைந்து செயற்பட தயக்கம் காட்டுவதோடு, அப்பெண்களைத் தங்கள் தலைமைக்கு கீழ் இயக்கவே விரும்புவார்கள். அவர்கள் வெளியில் வந்து முழுமையாக ஈடுபடுவதற்கு அவர்களது சமூக அந்தஸ்து இடமளிக்காது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண்களின் அடிப்படை உரிமைகள், சமூகவாய்ப்புகளில் திருப்தியின்மை, அவர்களுக்கு ஒரு நிலையான அந்தஸ்து இல்லாது ஒரு தாழ்வான நிலையேயுள்ளது. பொருளாதாரத்தில் மற்றவர்களிடம் தங்கியிருக்கவேண்டியுள்ளது. இன்னும் அடிப்பபடை சட்டஉரிமைகள் வென்றெடுக்கப்படாது, தொட்டிலிருந்து சுடுகாடுவரை அடக்கியாளப்படுகின்றாள். வேலைவாய்ப்பபின்மை, வறுமை காரணமாக விபச்சாரம், வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படுத்தல் ஆகியவற்றுக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

அடிமட்டத்திலிருந்து நாளாந்தம் பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளை எதிர்நோக்கும் அடிமட்டத் தொழிலாளப் பெண்களுக்குத்தான் தமக்கு விடுதலை வேண்டுமென்ற உணர்வு இருக்கும். வயல்களிலும், தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை செய்து குறைந்த சம்பளத்துடன் எந்தவித வசதிகளுமின்றி வாழ்க்கை நடாத்துபவர்களுக்குத்தான் உண்மையான விடுதலை அவசியம். தொழில் செய்யுமிடத்தில் முதலாளியிடமும், பின்னர் வீட்டில் கணவனிடமும் ஒடுக்குமுறைக்காளாக்கப்படுகின்றாள்

வேலையிலிருந்து வீட்டிற்கு திரும்பும்போது அவளுக்கான வேலைகள் காத்திருக்கின்றன. இன்னும் கூடிய மணித்தியாலங்கள் கூலியில்லாது வேலை செய்யயவேண்டியுள்ளது. ஒரு பெண்ணுக்கு பொருளாதாரம், வேலைவாய்ப்பு, வேலைநேரங்கள், சம்பளம், பாதுகாப்ப, ஒயவு போன்றவற்றில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இன்று அவளுக்கு நிகழும் அதே நடவடிக்கைகள் நாளையும் அவளை எதிர்நோக்குகின்றன.

அடிமட்டத்திலுள்ள பெண்களில் அதிகமானோர் கல்வியறிவற்றவர்களாக இருப்பதனால் அவர்கள் சுலபமாக ஒடுக்கப்படுகிறோம் என அறியாது ஒடுக்கப்படுகிறார்கள். கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் சமமான நிலையான சமூகமாற்றத்தின் மூலம் தான் பூரணவிடுதலை ஏற்பட்டாலும், அதற்கான ஆயத்தங்களுக்கான செயற்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு அடிமட்டத்திலுள்ள பெண்களை உணர்வுபூர்வமாக அமைப்பாவதன் மூலம் தான் ஒரு படியாவது முன்னோக்கிச் செல்லமுடியும்.


## தேனீ

இரு மாதங்களுக்கொருமுறை வெளிவருகின்றது.
ஆசிரியர்குழு தேனீக்கள்
தனி இதழ் 3டீ.எம்
வருடசந்தா 20டீ.எம்
ஆக்கங்கள், சந்தா முதலிய அனைத்துத் தொடர்புகளுக்கும்.
**THENEE**
Im Wachholder 11,
7151, ALLMERSBACH im TAL.
Buch:THENEE
Sparkonto Nr: 49435418
Bankleitzahl: 60261818
RAIFFEISEN BANK WEISSACHER TAL EG
7151, ALLMERSBACH im TAL


புதிய சஞ்சிகைகள்

அக்னி
AGNI
ALLEN STR.17
7144 ASPERG
WEST GERMANY

ஓசை
OSAI
R.RAJAGOBAL
5, RUE HERMAL
75018 PARIS
FRANCE

பள்ளம்
PALLAM
K.KANAGASINGAM
39, RUE DE LA JONQUIRE
75017 PARIS

மண்
V.Sivarajah,
Angertaler str. 98,
4100 Duisburg 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்க்கு வதிவிட அனுமதி வழங்கப்படுமா?

ஏறக்குறைய 20,000 இலங்கையர்கள் மேற்குஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ளார்கள். இவர்களில் ஏறக்குறைய 5,000 பேர் 8 வருடங்களாக இங்கு வாழ்கிறார்கள். இவர்களின் அரசியல் தஞ்சம் கோரிய விண்ணப்பம் முற்றுமுழுதாக மறுக்கப்பட்டுள்ளது. இவர்களை மேற்குஜேர்மனி திருப்பி அனுப்புமா? அல்லது மனித அபிமானமுறையில் காலகாலமாக இங்கு வாழ்ந்தால் இவர்களுக்கு வதிவிடஅனுமதி வழங்குமா? என்பது இன்னும் கேள்விக்குறியாகவேவுள்ளது.

மே.ஜேர்மனி 11 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாநிலங்களின் அரசின் கீழே நிர்வாகம் நடைபெறுகின்றது. ஒவ்வொரு மாநிலமும், அந்தந்த மாநிலத்திற்கும் ஏற்றவாறும், அந்தந்த மாநில அரசுக்கு ஏற்றவாறு சட்டங்களையும், நிர்வாகத்தையும் செயல்படுத்துகின்றன. ஆனால் மே.ஜேர்மனியின் மத்திய அரசின் சட்டங்களும், நிர்வாகமும் எல்லா மாநிலங்களுக்கு ஒரே மாதிரியாக நடைமுறைபடுத்தப்படும்.

இலங்கையருக்கு வதிவிட அனுமதியைப் பொறுத்தவரை பெர்லின், நோட்றைன் வெஸ்ட்பாலன் போன்ற மாநிலங்களில் 8 வருடங்களுக்கு மேல் அங்கு வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வதிவிடஅனுமதி வழங்கிவருகின்றன. மற்றைய மாநிலங்களில் இன்றுவரைக்கும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லையெனக் கூறலாம். ஆனால் வதிவிட அனுமதி விண்ணப்பித்தவர்களுக்கு இன்று வரைக்கும் முழுமையாக மறுக்கப்படாமல் காலம் தாழ்த்தி வருகின்றது.

அதேவேளை கிழக்கு ஜேர்மனி, ருமேனியா, செக்கோசோலோவக்கியா, ஹங்கேரி போன்ற நாடுகளிலிருந்து வருகின்ற அரசியல் அகதிகளுக்கு மே.ஜேர்மனியில் தஞ்சம் வழங்கப்படும் என மே.ஜேர்மனியில் வெளிநாட்டு அமைச்சர். கென்சர் கூறியுள்ளார். இவர்களில் பெரும்பாலானோர் கிழக்கு ஜேர்மனியிலிருந்து வந்துவிட்டார்கள். அத்துடன் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையருக்கு வதிவிட அனுமதி வழங்க காலம் தாழ்த்துவதுவும், மாநில அரசுகள் அதை எவ்வளவு தூரம் செயல்படுத்தும் என்பது புரியாத புதிராகவேயுள்ளது. அதேவேளை இந்த மாநில அரசுகள் அனுமதி வழங்கினால் ஒவ்வொரு நகரத்திலுமுள்ள வெளிநாட்டவர்களுக்கு பொறுப்பபாகவுள்ள வெளிநாட்டு அலுவலகம் ஒரு சிலருக்கு வதிவிடஅனுமதி வழங்காமல் இருப்பதற்கு அதிகாரம் உண்டு. உ+ம் குற்றவியல் வழக்குகள்.

---

## சிவநேசன்

---

இந்நிலையில் மே.ஜேர்மனியின் மத்திய அரசாங்கமானது, அரசாங்கக்கட்சியும், எதிர்கட்சியும் இணைந்து (C.D.U, C.S.U, F.D.P, S.P.D) மேற்கு ஜேர்மனியில் வாழ்கின்ற வெளிநாட்டவருக்கு நிறைய பாதுகாப்பும், உரிமையும் வழங்கப்படவேண்டுமென்றும், அதேவேளை வெளிநாட்டவர்கள் மே.ஜேர்மனிக்கு வருவதை(கிழக்கு ஜேர்மனி தவிர) நிறுத்தப்படவேண்டும் என்று பிரேரணையை பாராளுமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளார்கள். இது எப்போது சட்டமாக்கப்பட்டு செயல்படுத்தப்படுமென்பது தெரியவில்லை.

இந்த பிரேரணையை சட்டமாக்கி விரைவில் நடைமுறைப்படுத்தினால், இலங்கையருக்கு மட்டுமன்றி பல வெளிநாட்டவர்களுக்கும் இது ஆறுதலளிக்கும். மனிதபிமான முறையில் இதனை நடைமுறைப்படுத்தல் அனைவரினதும் அபிலாசையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்ஆபிரிக்கா

## தொடரும் நிறவெறி

- சந்துஷ்

நெல்சன் மன்டேலாவின் விடுதலையையும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், உட்பட அனைத்து நிறவெறிக்கெதிரான கட்சிகளின் மீதான தடைகளும் நீக்கப்பட்டதையும் தொடர்ந்து, தென்னாபிரிக்கவரசானது தனது இனவொதுக்கல் கொள்கையை கை விட்டுவிட்டதென்ற கருத்தும், "ஏனைய "ஜனநாயக"நாடுகளின் குடும்பத்துடன் தென்னாபிரிக்காவும் இனி சேர்ந்து கொள்ளும், இதனால் ஏனைய நாடுகள் தென்னாபிரிக்கா மீது விதித்திருந்த பொருளாதாரத்தடைகள் உட்பட மற்றைய பகிஷ்கரிப்புகளும் தளர்த்தப்படலாம்" போன்ற ஊகங்களும் அபிப்பிராயமும் உலகளாவியரீதியில் வளர்ந்து வரும் வேளையிது.

நெல்சன் மன்டேலா எதற்காக விடுதலை செய்யப்பட்டார்?

அவர் 27 வருடங்கள் ஆயுட் தண்டனை அனுபவித்ததன் காரணம் அவர் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டமையோ, அல்லது கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்பட்டதற்காகவோவல்ல. இவற்றிற்கும் மேலாக, மண்டேலாவை சிறையிலடைக்க வேண்டிய முக்கிய காரணமொன்றும் ஆட்சியாளர்களுக்கு இருந்தது. நிறவெறி ஆட்சியாளர்களால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வரும் அமைப்புமுறைக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய இரண்டு முக்கிய கோரிக்கைளான

"தென்னாபிரிக்காவிலுள்ள எல்லாக் கறுப்பின மக்களும் அந்நாட்டின் பிரஜைகளாக அங்கிகரிக்கப்படவேண்டும்"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சகலருக்கும் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்" போன்ற கறுப்பின மக்களின் உரிமைகளுக்கானகோரிக்கைகளின் "அடையாளமாக" மன்டேலா விளங்கினார். அதனாலேயே முக்கியமாகக் கைது செய்யப்பட்டார். தென்னாபிரிக்காவின் அனர்த்தங்களின் பின்னணியில் இருப்பது உண்மையில் நிறவெறி மாத்திரமல்ல ஒரு தீர்க்கமான சமூக-பொருளாதார வரலாற்றுக்காரணமொன்று அந்நாட்டின் இனங்களைப் பிரித்துவைத்து இனவொதுக்கலை கூர்மைப்படுத்தியுள்ளது. இலட்சக்கணக்கான ஆபிரிக்கத் தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து பெறப்படும் உபரியிலேயே தென்னாபிரிக்க முதலாளித்துவம் உயிர் வாழ்கிறது. அவர்களின் உழைப்பிற்காகவும், சுரண்டுவதற்காகவும் இவற்றின்பொருட்டு தொடர்ந்தும் அவர்களின் உரிமைகளை நசுக்கி வைப்பதற்கான இனவொடுக்கலை கட்டவிழ்த்து விடுவது அரசின் அவசியமாகிறது.

தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களில் மத்தியதரவர்க்கத்தினரே அதிகமாகக் காணப்பட்டபோதிலும், குறைந்த கூலியில் கறுப்பினத்தவரை, அரசு சுரண்டிவரும் நிலைமையே நிலவுகிறது.

இனவொடுக்குமுறையின் காரணமாக அரசியல், பொருளாதார நிலமைகளில் ஏற்பட்ட சிக்கல்கள் எண்பதுகளில் வலுவடையத் தொடங்கின. இவ்விரண்டு விடயங்களில் ஏற்பட்ட இம்மாற்றங்கள் தென்னாபிரிக்க முதலாளித்துவத்திற்குள் உருவாக்கிய நெருக்கடிகளும், அதன் புதிய தேவைகளுமே அரசின் இன்றைய மாற்றங்களுக்குக்காரணமவிருக்கின்றன. எனினும் அங்குள்ள இனவெறிக்கெதிரான கட்சிகள், அரசாங்கத்துடன் இணக்கத்திற்குச் செல்வதன் மூலம் பெறப்படும் தீர்வுகள் தென்னாபிரிக்காவின் அடிப்படைப்பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது என இளைஞர்மட்ட தீவிரவாதக்கட்சிகள் எதிர்ப்புத்தெரிவித்துள்ளதுடன் பலமட்டங்களிலிருந்தும் வெகுஜனப்போராட்டங்கள் கிளர்ந்துள்ளன.

மிதவாதக்கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளைப்பற்றி தென்னாபிரிக்க அதிபர் டி கிளார்க் கூறுகையில்" மாறுபட்ட நிர்வாகம் ஒன்றின் அவசியத்தை நாம் உணர்கிறேம். வறுமை, பட்டினி, கல்வியறிவின்மை, சுகாதார வசதிகள், வேலையின்மை, வீடற்றநிலை போன்றவற்றிற்கெதிரான கோரிக்கைகளிருந்து தொடர்ந்தும் அந்நியமாகி நிற்பது முடியாத காரியம் என்று குறிப்பிட்டிருந்தார். டி கிளார்க் அரசானது தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தகளின் பேரில் பிரச்சனைகளை அணுகினாலும் அரசைப் பொருத்தவரையில் அவை சாதகமற்ற விளைவுகளையே ஏற்படுத்தும். இச்சாதகமற்ற நிலைமையில் தென்னாபிரிக்கச்சமுதாயத்தில் முக்கிய பல சீர்திருத்தங்கள் நடைபெறும் வாய்ப்புகள் இருக்கின்றன.

அரசிற்கும் மிதவாதக்கட்சிகளுக்குமிடையிலான முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளில் "சர்வஜன வாக்கெடுப்பு" பற்றி ஆராயப்படவிருக்கிறது. ஒரு கறுப்பினப் பிரஜை ஒரேயொரு வாக்கை மட்டுமே போடலாம் என்றும் வெள்ளையினத்தவர் மூன்றுக்கு மேற்பட்ட வாக்குகளைப் போடலாம் என்ற சட்டமே இதுநாள்வரை நிறவெறி அரசினால் அமுல்படுத்தப்பட்டு வந்தது. அத்துடன் "பந்துஸ்தான்கள்" என்று அழைக்கப்படும் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த இடங்களில், வாழும் கறுப்பினத்தவர்கள் அச்சிறு பகுதியில் உள்ள வேட்பாளருக்கு மாத்திரமே வாக்களிக்கலாம். இந்தப் பேச்சுக்களின்போது "ஒரு பிரஜை, ஒரு வாக்கு"

( தொடர்ச்சி _ 16 பக்கம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லையே.....

பெண்களுக்கு எதிரான பலாதகாரங்கள் எங்கும் பரந்து காணப்படுகின்றன. கற்பழிப்பு, உயிருடன் எரித்தல், கடத்தல், கொலை செய்யப்படுதல் என்று பட்டியல் நீள்கிறது. வேலை செய்யுமிடத்திலோ, வீதியிலோ, வீடுகளிலோ எங்கும் அவளுக்கெதிரான பலாத்காரங்கள் அவளைத் தொடர்கின்றன. பெண் என்றால் பலவீனமானவள், அவளை என்னவேண்டுமானலும் செய்யலாம், அவள் அடிமைதானே, அவளுக்கு உணர்ச்சியில்லை, ஆசையில்லை, சுருக்கமாகச் சொல்லப்போனால் அவளுக்கு எதுவுமில்லை என்பது தான் எல்லோரினதும் பொதுவான கருத்து. அவள் கற்பழிக்கப்பட்டாலும், கொலைசெய்யப்பட்டாலும் குற்றவாளி பெண் தான்.

இத்தகைய பலாத்காரங்கள் பெண்கள் எந்த நாட்டிலிருந்தாலும் நிகழ்கின்றன. இதே தொடரில் அன்மையில் பிற்றிஹைம்(Bietigheim) எனுமிடத்தில் மேற்கு ஜேர்மனியில்அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் ஒரு அகதித் தமிழர், குழந்தை பிறந்து மூன்று வாரத்தில் தனது மனைவிக்கு அசிற் பருக்கி கொலை செய்யமுயற்சித்துள்ளார். இந்தப் பெண் தற்போது மோசமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இச்சம்பவத்தை பார்க்குமிடத்தில் எந்தவிதமான மனிதத்தன்மையுமில்லாத ஒரு காட்டுமிராண்டித்தனமான செயலாகத்தான் இருக்கின்றது. குழந்தை பிறந்தவுடன் கணவனின் கடமை, மனைவியை நன்கு கவனிப்பதேயன்றி கொலைசெய்வதல்ல. இலங்கையிலிருந்து வருவது, மணம் முடிப்பது, குழந்தைகளைப் பெறுவது, பின் இறப்பது தான் பெண்களின் வாழ்க்கையென சிந்தித்திருக்கிறார் என தோன்றுகின்றது.

அந்தப் பெண் இறக்காவிட்டாலும் தினமும் நரகவேதனையை அனுபவிக்க வேண்டியவளாக உள்ளாள். இந்தச் சம்பவம் நடைபெற்ற பின்பும், " வெளிநாடுகளில் இருக்கும் பெண்கள் சரியான மோசம்" என இங்கு வாழ்பவர்கள் நியாயப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறே பல பெண்கள் முன் பின் அறிமுகமில்லாதவர்களை மணம் முடிப்பதற்காக வெளிநாடுகளுக்கு வந்து குவிகிறார்கள். பெண்குழந்தை பிறந்த நாளிலிருந்து அவளை திருமணத்துக்கென தயார்படுத்தி இளம்வயதிலேயே மணம்முடித்துக் கொடுக்கினறனர். சொந்தநாட்டில் சீதனம் கொடுத்து மணம் முடிப்பதனால் அவர்களின் அந்தஸ்தை வெளிகாட்டமுடியாமையினால் கூடுதலாக அதிகளவு சீதனம் கொடுத்து வெளிநாடுகளில் திருமணம் செய்து கொடுக்கின்றனர். நாட்டின் யதார்த்த நிலைமையை அறிந்தும், பணத்தை மட்டும் குறிக்கோளாக வைத்து அறிமுகமில்லாத பெண்களை இங்கு வரவழைக்கின்றனர். பெண்களை எவ்வளவு சீக்கிரம் மணம்முடித்து வைப்பதன் மூலம் தங்கள் கடமைமுடிந்துவிடும், அல்லது சமூகத்தின் கேலிகளைச் சம்பாதிக்க நேரிடும் என்பதற்காக பெண்களை எப்படியாவது கடத்துகின்றனர். அறிமுகமில்லாதவர்கள் எப்படி வாழ்வது, சந்தோஷமான வாழ்க்கை வாழமுடியுமா என சிந்தித்து பார்ப்பதில்லை. இரண்டு இலட்சத்திற்குமேல் இருந்தால் போதும் விமானத்தில் ஏற்றுவதுதான் மிச்சம். மணம்முடித்தபின் வீட்டிற்குள்ளே அடங்கி வெளியுலகுடன் எந்தவிதமான தொடர்புகளுமற்ற கணவனுக்கு சேவை செய்யும் மனைவியாக, சிலசமயங்களில் ஒரு வருடத்தில் குழந்தைக்கு தாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர்களது வாழ்க்கை நான்கு சுவருக்குள் குறுக்கப்படுகின்றது.

இது தவறு. உண்மையாக உயிருக்கு பயந்துதான் பெண்கள் இங்கு வருகிறார்கள் என்ற விவாதமும் எழுகிறது. அப்படியானல் இரண்டு இலட்சத்திற்கு மேல் உள்ளவர்களுக்குத்தான் உயிரின் பெறுமதி இருக்கின்றதா என்ற கேள்வியும் எழுகின்றது. சொந்தநாட்டிலிருந்து வெளிநாட்டிலிருப்பவர்கள் எல்லோரும் மனிதர்களென நினைத்து வெளிநாட்டிற்கு வருபவர்கள் மனிதத்தோல் போர்த்திய மிருகங்களும் ஒழிந்திருக்கின்றன என்பதையும் உணரவேண்டும்.

குறிப்பாக மத்தியதரவர்க்கத்தினர் "எங்கடை பிள்ளையை வெளிநாட்டிலதான் கல்யாணம் கட்டிகொடுப்போம்" என்று சொல்வதன்மூலம் ஒருவித பெருமையை ஈட்டிக்கொள்கின்றனர். சமூகப்படிகளில் மேன்மேலும் ஏறுவதில் தான் கவனம் செலுத்துகிறார்களே தவிர வெளிநாட்டிலுள்ள யதார்த்த நிலைமையை உணருகிறார்கள் இல்லை.

மணம்முடிப்பதற்கென வெளிநாட்டிற்கு வருபவர்களை உயரம் குறைவு, கறுப்பு, வருத்தம், அழகில்லை என நிராகரித்து, நம்பி வந்த பெண்களை ஏமாற்றுகின்றனர் அல்லது சீதனம் குறைவு என்ற காரணத்தினால் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றர்.

பெண் என்றால் உணர்ச்சிகளற்ற ஜடங்கள் என்ற நிலையை மாற்றி தங்களது வாழ்வை தாங்களே தீர்மானிக்க வேண்டும் என்ற உணர்வு பெண்களுக்கு வரவேண்டும்.

ஊர்க்குளவி

---

( 14ம் பக்கத் தொடர்ச்சி )

என்ற கோரிக்கையையும், "பந்துஸ்தான்கள்" கலைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் கட்சிகள் முன்வைத்துள்ளன. இதனடிப்படையில் பார்க்கும்பொழுது முன்னர் இருந்ததைப்போல் தொகுதிகளை இனரீதியாகப் பிரித்திருந்த நிலை மாற்றப்பட்டால் "ஆபிரிக்கர்களும்" அங்குள்ள ஏனைய இனத்தவர்களைப்போல் தேர்தல்களில் வாக்களிக்கலாம், எந்தத் தேர்தல்களிலும் போட்டியிடலாம். இத்தகைய சீர்திருத்தங்கள் தென்னாபிரிக்கப் பாராளுமன்றத்தில் கறுப்பின மக்களின் பெரும்பான்மையை ஏற்படுத்தக் கூடியவகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்பேச்சுக்கள் ஒரு சில வரம்புகளிற்குட்பட்டு சமரசங்களுடன் நின்று விடலாம். ஏனெனில் "ஒரு பிரஜை, ஒரு வாக்கு " என்ற கோரிக்கையை சிறுபான்மை வெள்ளையினத்தலைவர்கள் எதிர்த்துள்ளனர். தனது ஆட்சியினதும் ஏனைய முதலாளித்துவ நாடுகளினதும் நலன்களுக்காகவும் அரசு இவ்வெதிர்ப்புகளுக்கு முகங் கொடுக்கவேண்டியேற்படலாம். தென்னாபிரிக்கச் சமுதாயமானது பல உடனடிச் சீர்திருத்தங்களை வேண்டியுள்ளது.

இவ்வம்சங்களைக் கொண்ட சீர்திருத்தங்கள் நன்மைகளை அளித்தாலும் தென்னாபிரிக்க சமுதாயமானது தொடர்ந்தும் முதலாளித்துவமைப்புமுறையைக் கொண்ட சமுதாயமாக இருப்பதை தேசிய, மிதவாதக் கட்சிகள் ஆட்சேபிக்காமலேயே இருந்துவருகின்றன.

வர்க்க வேறுபாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கான சமூகமாற்றம் ஏற்படும் வரை தென்னாபிரிக்காவில் இனவொதுக்கல் தொடர்ந்தும் இருக்கும். ஏனெனில் தனக்குச் சாதகமான இவ்வமைப்பு முறையை வைத்திருப்பதற்காக அரசு இனவொதுக்கலைக் கை விடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சதுரங்கம்

வசந்தன்



இலங்கையின் அரசியல் சதுரங்கத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கமும் மற்றைய கட்சிகளும் தத்தமது காய்களை தமது நலன்களுக்காக நகர்த்திக் கொண்டிருக்கின்ற வேளையில் பாதிக்கப்படும் மக்கள் மட்டும் எதுவுமே செய்ய முடியாத கையாலாகாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஒவ்வொரு காயின் அசைவிலும் அந்த மக்களின் வாழ்க்கையே பணயம் வைக்கப்படுகின்றது என்பதுதான் இந்த நாட்டின் கொடூரமான யதார்த்தமாகவிருக்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி தருவிக்கப்பட்ட இந்தியப்படைகள் முற்றாக நீங்கிவிட்ட நிலமைகளில் இந்த ஒபபந்தம சாதித்தது என்ன என்ற ஐந்தொகைகளும் எடுக்கப் படுகின்றன ஸ்ரீலங்காவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதிலும் – விடுதலைப் புலிகள் உட்பட – சகல தமிழ் இயக்கங்களையும் "ஜனநாயக நீரோட்டத்தினுள்" கொண்டுவருவதிலும் தாம் வெற்றி பெற்றுள்ளாதாக இந்தியப் பேச்சாளர்கள் கூறியுள்ளார்கள் மறுபுறத்தில் மகாணசபைகளுக்கான அதிகாரப்பரவலாக்கல்கள் முற்றாக நிறைவேற்றப்படாமலும், உறுதி செய்யப்பட்ட ஜனநாயக வழிமுறைகள் எந்தவகையிலும் நடைமுறையில் இல்லாத நிலைமைகள் இன்னும் தொடருவதாலும் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் அது முழுமை பெறவில்லையென்றே கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தால் உருவாகிய மாகாணசபைகளை எதிர்த்த விடுதலைப்புலிகள் இன்று அந்த சபைகளுக்குத் தேர்தல் நடைபெறவேண்டுமெனவும், அதில் தாம் பெரும்பான்மையாக வெற்றிபெறுவோமெனவும் கூறிவருகின்றனர்.

1987 ல் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இந்தியபடைகளை வரவேற்ற பின், இடைக்கால சபைகளில் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுக்கொள்ளவிருந்த விடுதலைப்புலிகள் தமது அரசியல் தந்திரோபாயமற்ற தன்மைகளினால் இந்தியப்படைகளினுடனான மோதல்களை ஏற்படுத்தினர். எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் இந்திய அரசும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கையரசும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தமிழ் இயக்கம் விடுதலைப்புலிகள் தான் என்பதை கடந்த கால வரலாறுகள் காட்டியிருக்கின்றன. இந்த நிலைமைகளை அவர்கள் அன்று பாவித்திருந்தால் இடைக்கால சபைகளுடன் மாகாணசபைகளும் அவற்றின் பொலிஸ்படைகளும் 1987லேயே அவர்களுடையதாக இருந்திருப்பதுடன் ஆயிரக்கணக்கான தமிழ்மக்களினதும், போராளிகளினதும் மரணங்களையும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் மற்றைய தமிழ் இயக்கங்களுடன் சிறிதளவாவது அரசியல் ஜனநாயகங்களை (அதிகாரங்களை அல்ல) பகிர்ந்துகொள்ளமுடியாத விடுதலைப்புலிகளின் மனோபாவத்தால் 1987ல் செய்யவேண்டியதை ஆயிரக்கணக்கானவர்களின் மரணங்களுக்குப்பின் 1990ல் செய்துள்ளனர்!

இந்த ஒப்பந்தத்தின் மூலம் நடைபெற்ற மாகாணசபை தேர்தல்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வடபகுதியில் அதிகளவு ஸ்தானங்களை பெற்றது தற்செயலாக நடைபெற்ற நிகழ்வு என்று தான் சொல்லவேண்டும். தமிழ்மக்களின் பிற்போக்குத்தனங்களுக்கெல்லாம் உறைவிடமான யாழ்பாணத்தவர்களின் மனோபாவங்களை முற்றாக விடுதலைப்புலிகள் இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்துகையில், மத்தியதரவர்க்கத்தனரின் "நெளிந்து வளையும் தன்மையினை" ஈரோஸ் இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இவ்வியக்கங்கள் பங்குபற்றாத மாகாணசபை தேர்தல்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெற்றிபெற்றது. அவர்கள் பெரும்பான்மையாகவிருந்த மாகாணசபையின் செயற்பாடுகளை ஸ்ரீலங்கா அரசாங்கமும், நிர்வாகத்தடைகள் மூலம் விடுதலைப்புலிகளும் குழப்பிக்கொண்டிருந்த சூழ்நிலைகளில் மாகாணசபைகளின் மூலம் மக்கள் எந்தவித நன்மைகளையும் பெறமுடியவில்லை. மறுபுறத்தில் மாகாண பொலிஸ்படைகளுக்கு கட்டாய ஆட்சேர்ப்பு முறைகளைக் கையாண்டு மத்தியதரவர்க்கத்தினரின் வெறுப்பை மேலும் சம்பாதித்துக்கொண்டது மாகாணவரசு. மேலும், ஈ.என்.எல். எவ். செயற்பட்ட காலங்களில் கூட்டுப்பொறுப்பினால் ஏற்பட்ட வடுக்களைப் போல 'தமிழ்தேசியசபை' உருவாக்கப்பட்டபோதும் கூட்டுப்பொறுப்பினால் ஏற்பட்ட பலாபலன்களையும் அது சுமக்கவேண்டியிருந்தது.

ஆனால் 1986களின் பின்பு உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் விடுதலைப்புலிகள் தவிர்ந்த மற்றைய தமிழ் இயக்கங்கள் யாவும் அழித்தொழிக்கப்பட்டுவிட்டன என்ற (தற்போது செய்யப்படுவது போன்ற) பிரசாரங்களை பொய்ப்பிக்கும் வகையில் மக்கள் மத்தியில் மற்றைய இயக்கங்களும் இருக்கின்றன என்பதை அரசியல் ரீதியாக இத்தேர்தல் நிரூபித்துக்காட்டியது.

தென்னிலங்கையில் ஜனநாயக சுதந்திரங்களை "டயர்" போட்டு கொழுத்திக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கம், அரசியல் சதுரங்கத்தில் தனது காய்களை சுயநலன்களுக்காக நன்றாகவே நகர்த்திக்கொண்டிருக்கிறது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி முழுநலன்களையும் பெற்றுக்கொண்ட அரசாங்கம் இன்று தனது நலன்களை மேலும் ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்தப் அடிப்படையில் விடுதலைப்புலிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயக்கத்தையும் அது தாராளமாக பயன்படுத்துகிறது.

தமிழ்மக்களின் மீது அரசு செய்த ஒடுக்குமுறைகளுக்கும், படுகொலைகளுக்கும் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட எதிர்ப்புகள் அதற்கு அத்தியவசியமான வெளிநாட்டு உதவிகளையும், உல்லாசப்பிரயாணிகளின் வருகையையும் பாதித்தது. இதற்கு காரணம் தமிழ்மக்களின் சர்வதேச பிரசாரம் என்பதும், இதைச் செயத சர்வதேச அங்கிகாரம் பெற்ற தமிழ்த்தலைமைகளை அழித்தொழிக்க வேண்டுமென்பதும் பிரேமதாஸ அரசாங்கத்தின் நோக்கமாகவிருந்தது. அரசியல் எதிரிகளை சட்டரீதியாகச் செயலிழக்கச் செய்வது (ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பிரஜாவுரிமையை ரத்துச் செய்தது, தனிநாடு கோரும் உரிமையை சட்டவிரோதமாக்கும் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்தின் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பாராளுமன்றத்திலிருந்தும், நாட்டிலிருந்தும் வெளியேற்றியது) ஜயவர்த்தனவின் அரசியல் தந்திரோபயமாகவிருந்தது. அரசியல் எதிரிகளை கொன்று எரிப்பது (உ+ம்: விஜேயவீர, கமநாயக்க மற்றைய இளைஞர்கள்) பிரேமதாஸவின் தந்திரோபயமாகவிருக்கின்றது. இந்த அடிப்படையில் தமிழர் விடுதலை கூட்டணித்தலைவர்களின் கொலைகளுக்கு அரங்கம் அமைத்துக் கொடுத்தது ஸ்ரீலங்கா அரசு. அதைத்தொடர்ந்து உமாமகேஸ்வரனின் படுகொலை – வரதராஜப்பெருமாளின் பெயரும் இந்த பட்டியலில் சேர்க்கப்படவிருந்தது.

ஜெகன், ஒபரோய் தேவனிலிருந்து மாற்று இயக்கத் தலைவர்களை வேட்டையாடும் பாரம்பரியத்தைக் கொண்ட விடுதலைப்புலிகள், சிறிசபாரத்தினத்தின் கொலையுடன் தமது வழிமுறைகளை மக்களுக்கு தெளிவாக்கிவிட்டனர். தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் தாங்கள் தான் என்பதை சர்வதேசரீதியாக எடுத்துக்காட்டுவதற்கு அமிர்தலிங்கத்தின் கொலை விடுதலைப்புலிகளுக்கு அத்தியவசியமாகியது. இக்கொலைகள் மூலம் தனது தேவைகளையும் பூர்த்தியாக்கிக்கொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது மற்றைய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. முதலாவதாக இலங்கையில் ஒரு அமைதி (மயான அமைதியென்றாலும்) ஏற்பட்டிருக்கிறது என்பதை வெளிநாடுகளுக்குக் காட்டி நாட்டின் நொறுங்கிக் கொண்டிருக்கும் தனது பொருளாதாரத்தை வெளிநாட்டுக்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியுடன் "செப்பனிடுவது" ஸ்ரீலங்கா அரசின் நோக்கமாகவிருக்கின்றது. இரண்டாவதாக தனது அரச அதிகாரத்தை நாடு முழுவதும் நிலைநாட்டுவதற்குரிய தந்திரோபயங்களையும் அது கடைப்பிடிக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் அராஜகங்களின் உச்சக்கட்டங்களின் போது தெற்கில் இரண்டு அரசுகள் செயற்படுகின்றன என்ற நிலைமையை அக்கட்சி தலைவர்களினதும் ஆயிரக்கணக்கான இளைஞர்களினதும் கொலைகள் மூலம் இல்லாது செய்த அரசாங்கம் வடக்கு கிழக்கில் வேறுவிதமான தந்தரோபயங்களை கையாள்கிறது.

1981ல் மாவட்டசபை தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வடபகுதியில் பெரும்பான்மையாக "வெற்றிபெறுதற்கு" யாழ்நகரையே எரித்து வாக்குப்பெட்டிகளை கள்ளவோட்டுகளால் நிரப்பி, தமது அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பிய ஐக்கிய தேசிய கட்சியினருக்கு, வடகிழக்கு மாகாணசபையில் தமது அதிகாரம் இருப்பதாகக் காட்டி சிங்கள இனவெறி சக்திகளுக்கு திருப்தியூட்டுவது அவசியமாகிறது. இந்த அடிப்படையில் இன்று செயலிழந்து போன மாகாணசபையை ஆளுனரின் ஆட்சியின் கீழ் கொண்டுவந்து அதன் மூலம் வடகிழக்கில் ஐக்கியதேசியக்கட்சி அதிகாரத்தை தொடரமுயற்சிக்கின்றது.

மறுபுறத்தில் கடைசி இந்திய சிப்பாய் இலங்கையிலிருந்து வெளியேறியபின் தமது ஆயுதங்களை கீழே போடப்போவதாக வாக்களித்த விடுதலைப்புலிகள், தனிநாட்டுக் கோரிக்கையை சட்டவிரோதமாக்கும் ஆறாவது திருத்தச்சட்டத்தை அகற்றினால் மட்டுமே ஆயுதங்களை கீழே போடப்போவதாக கூறியுள்ளனர். ஆறாவது திருத்தச்சட்டத்தை அரசாங்கம் அகற்றுமா என்ற கேள்வி எழுகையில்.......

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் தமது பத்தொன்பது கோரிக்கைகளையும், அவை ஒருவருடத்தில் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தனிநாட்டுப் பிரகடனம் செய்யப்போவதாகவும் அறிவித்தனர். எழுந்துள்ள சூழ்நிலைமைகளில் இது பிரேமதாஸ அரசாங்கத்தை குழப்பத்திற்குள்ளாக்கிய குண்டாக அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைக் களைய வேண்டுமானால் ஆறாவது திருத்தச்சட்டத்தை அகற்றவேண்டும்!

வரதராஜப்பெருமாள் மீது சட்டரீதியாக தேசத்துரோக குற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் ஆறாவது திருத்தச்சட்டம் சட்டப்புத்தகத்தில் இருக்கவேண்டும்!!

இந்த இக்கட்டான நிலைமைகளில் பிரேமதாஸ காய்களை அரக்குவதற்குப் பதிலாக ஆடுபவர்களை மாற்றிக் கொண்டிருக்கிறார். ரஞ்சன் விஜேயரட்ணவின் வாய் மூடப்பட்டு விட்டது. வடகிழக்கு மாகாணசபை, ஆளுனரின் கீழ் செயற்படுகிறது. வவுனியா ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற அங்கத்துவர் மந்திரியாகிவிட்டார். வடக்கிலும், கிழக்கிலும் இலங்கை இராணுவமுகாம்கள் பழையபடி திறக்கப்படுகின்றன......

ஸ்ரீலங்கா அரசின் நலன்களுக்காக காய்கள் மேலும்நகர்த்தப்படும்.

விடுதலைப்புலிகள் இன்னும் ஆயுதமாயையில் ......

ஆனால் தமிழ் மக்கள் ஊமைகளாக இன்னும் கையாலாகாதவர்களாக தனிக்கட்சி சர்வதிகாரத்தில்......

"கிளாஸ்நோஸ்டும், பிறஸ்ரோறிக்காவும் தமிழ்மக்களுக்கு என்றுமே விளங்காத புதிர்களாகத்தான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தைமிக்க அதிசய சந்தை

புஞநில்

பெண் நான்!
பெயர் சொன்னால்
பேயும் இரங்கிடுமே,-
பேதை எனக்கு
வாழ்வளிக்க
பேரம் பேசிடும்
சீதனச் சந்தை
இங்கே-
சீதேவி வேண்டுமாம்
குடும்பத்துக்கு,
சீதனமும் தரவேண்டுமாம்,
மானும் வேண்டுமாம்
மானை ருசிக்க
கூலியும் வேண்டும்
விந்தை மிக்க அதிசய
சந்தை இது;

பெண்ணின் விடுதலைக்காக
பொறித்து வைத்த,
நெருப்பு வார்த்தை
வரிகள் எல்லாம்
ஆடவர்களின்!
உஷ்ணத்தால் சாம்பலானதா?
ஐயகோ!
சீர் தூக்கி நிறுத்த
வேண்டிய சிங்கங்களே
சீதனம் கேட்டு சிதைப்பதா?

சிந்தை தெளியவில்லையா,
இன்னும்!
சீதனச் சந்தையின்
கர்ப்பம் கலைக்க!
ஓ!
ஆண்கள் மேல்
ஆண்களுக்கே
நம்பிககை
இல்லாமல் போய்விட்டதோ?

இன்று!
பெண்ணைப் பெற்ற,
பெற்றோர்கள்
பெருமூச்சு விட,
பேதை அவள் மனம்
பேதலித்து நிற்க...!
பொங்கி வரும்
கண்களின் கண்ணீரை
கை கொண்டு துடைக்க
காளை நெஞ்சங்கள்
கனிந்திடும் காலம் என்றோ!
கலியுகம் இன்று,
அதை கலைந்து எறிந்திடும்
புதுயுகம் ஒன்று
புதிதாய் சமைத்திடுவோம்
நேற்றயது நேற்றோடு போகட்டும்
இன்றயது இன்றோடு மலரட்டும்
நாளையது நன்றாக விடியட்டும்.
நல்லாசிகள் என்றென்றும் பொழியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள்



சீதன
சந்தையின்
விற்பனை நிலவுகள்
இனப்பெருக்கம்
செய்யும்
இரவு நேர இயந்திரங்கள்
நாங்களே
அந்த நவீன அடிமைகள்..

கல்யான
கனவுகளைப்
பதுக்கல் செய்ததற்காய்
சமுதாயத்தால்
விலங்கிடப்பட்டவர்கள்..

நாங்கள்
சமவுரிமை கேட்டு
சாயந்த
சேலைக் கோபுரங்கள்...

சீதை
பாஞ்சாலி என
பெயர் இருந்தும்
இராவணர்களால் கூட
விசாரிக்கப்படாதவர்கள்...

இன்னும் நாங்கள்
இளமைச் சிறையின்
ஆயுள் கைதிகள்
இருந்தாலும்
தாலிக்குத் தவம்
இருப்பவர்கள்...

சமூகத்தின்
குரல்களே
எங்களை சுவாசிக்கவிடுங்கள்
ஜாதி மதம் இனம்
கலாசாரம் என்ற
முடிச்சுக்களிலிருந்து
எங்களை
அவிழ்த்துவிடுங்கள்!!

- [illegible] -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org